தினமணி

**உயர்கிறது மேட்டூர் அணை நீர்மட்டம்**

First Published : 07 Jun 2010 12:00:00 AM IST



மேட்டூர், ஜூன் 6: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அணை நீர்மட்டம் நாளொன்றுக்கு 0.5 அடி வீதம் உயரத் தொடங்கி உள்ளது.

மேட்டூர் அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் அதன் உபநதிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 7,525 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக விநாடிக்கு 1,310 கனஅடி வீதம் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் அணை நீர்மட்டம் தினமும் 0.5 அடி வீதம் உயர்ந்து வருகிறது.

நீர்மட்டம் உயரத் தொடங்கி உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இருப்பினும், கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் வந்தால் மட்டுமே மேட்டூர் அணையிலிருந்து டெல்டா சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது குறித்து முடிவு செய்யப்படும் வாய்ப்பு உள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி

மேட்டூர் அணை நீர்மட்டம் 77.50 அடியாக இருந்தது.

**வெப்ப சலனம்: சென்னை உள்பட தமிழகத்தில் மழை**

First Published : 07 Jun 2010 12:00:00 AM IST

Last Updated :



சென்னை, ஜூன் 6: வெப்பசலனத்தால் சென்னை உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது.

இதன் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை பகலில் தமிழகம் மற்றும் புதுவையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சென்னை உள்பட தமிழகத்தின் பல இடங்களில் விட்டு விட்டு மழை பெய்தது. இதனால் வெயிலின் அளவு அனைத்து பகுதிகளிலும் 100 டிகிரி பாரன்ஹீட்டுக்கு குறைவாகவே பதிவானது.

தமிழகம் மற்றும் புதுவையில் கடந்த ஒரு வாரமாக வெயிலின் அளவு கத்திரி வெயிலைக் காட்டிலும் மிக அதிகமாக பதிவானது. கடற்கரை பகுதிகளில் வெப்பக்காற்று வீசியது. இந்த நிலையில் வெப்பசலனம் உருவாகி கடந்த 2 நாள்களாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

வெப்பசலனம் காரணமாக தமிழகத்தில் சென்னை உள்பட ஒரு சில இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி அதிகபட்சமாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் 50 மில்லி மீட்டர் மழை பதிவானது. விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் 40 மில்லி மீட்டர், அறந்தாங்கி, தர்மபுரி, கோத்தகிரி, குந்தாபாலம், உதகமண்டலம், மேலூர், சோழவந்தான் ஆகிய பகுதிகளில் 30 மில்லி மீட்டர், சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதிகள், அன்னூர், சின்னக்கல்லார், பவானிசாகர் உள்ளிட்ட பகுதிகளில் 20 மில்லி மீட்டர், கோபிச்செட்டிபாளையம், நடுவட்டம், மருங்காபுரி, மதுரை, விருதுநகர், அருப்புக்கோட்டை, சாத்தூர், சிவகாசி ஆகிய பகுதிகளில் 10 மில்லி மீட்டர் மழையும் பதிவானது.

**ஞாயிற்றுக்கிழமை பதிவான வெயில் அளவு**

| | |
|---|---|
| கடலூர் | 99 |
| தூத்துக்குடி | 98 |
| மதுரை | 98 |
| நாகப்பட்டினம் | 98 |
| புதுச்சேரி | 97 |
| திருச்சி | 96 |
| திருநெல்வேலி | 96 |
| வேலூர் | 96 |
| சேலம் | 94 |
| கோவை | 92 |
| சென்னை | 91 |
| கன்னியாகுமரி | 87 |
| வால்பாறை | 76 |
| கொடைக்கானல் | 69 |

**மழையை எதிர்நோக்கும் அணைகள்**

First Published : 07 Jun 2010 09:26:03 AM IST

அம்பாசமுத்திரம், ஜூன் 6: திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. கடனாநதி, ராமநதி உள்ளிட்ட அணைகள் வறண்டுவிட்டன. இதனால், குடிநீர்த் தட்டுப்பாடு எழுந்துள்ளது. எனவே, பருவ மழை பெய்தால்தான் குடிநீர், விவசாயத் தேவைகளை நிறைவு செய்ய முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை நீராதாரத்தைக் கொண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் கட்டப்பட்ட பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி உள்ளிட்ட அணைகள் மூலம் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களின் குடிநீர், பாசனத் தேவைகள் பூர்த்தியாகின்றன. வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவ மழைக் காலங்களில் நீர்வரத்து பெற்றுள்ளதால் தாமிரபரணி நதி வற்றாத நதியாக திகழ்கிறது.

2009-ம் ஆண்டு வழக்கத்தைவிட பருவ மழை அதிகமாக பெய்ததால் இம் மாவட்டத்தில் உள்ள அணைகள் முன் கூட்டியே நிரம்பின. பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி அணைகள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் நிரம்பிய போதிலும் கோடைக்காலமான ஏப்ரல், மே மாதத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு எழுந்தது.

மழைக் காலங்களில் நீர் வீணாகக் கடலில் கலப்பதாலும், ஏப்ரல், மே மாதங்களில் முன் கார் பருவ சாகுபடி செய்ய அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவதாலும் பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைகிறது. இவ்வணைகளின் நீர்மட்டம் 60 அடியாக குறையும்போது குடிநீர்த் தேவைக்காக அணைகளில் நீரை சேமித்து வைக்க வேண்டிய நிலை உள்ளது.

கடந்த மார்ச் 31-ம் தேதி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 89.80 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 101.54 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 89.65 அடியாகவும் இருந்தது. ஜூன் 6-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நிலவரப்படி பாபநாசம் அணை நீர்மட்டம் 54.95 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 64.47 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டும் 60.80 அடியாகவும் குறைந்துவிட்டது.

குடிநீர், பாசனத் தேவைக்காக பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் இருந்து 700 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணைகளுக்கு நீர்வரத்து இல்லை. இம்மாதம் 1-ம் தேதி முதல் கார் பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணையில் இருந்து வடக்கு, தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய் மூலம் பாசனம் பெறும் 6,000 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் உள்ள கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், பாளையம் கால்வாய், திருநெல்வேலி கால்வாய் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் 4 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 46,000 ஏக்கர் நிலங்களுக்கும் அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டியுள்ளது. இந்நிலையில், அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக குடிநீர்த் தட்டுப்பாடு எழுந்துள்ளது. 85 அடி கொள்ளளவு கொண்ட கடனாநதி அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 20 அடியாக இருந்தது. அணையின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்ததால் அணை மூடப்பட்டது. அணை மூடப்பட்டதால் கருணை ஆறு வறண்டது.

இதனால் கருணை ஆற்றங்கரையில் உள்ள சிவசைலம், மேலஆம்பூர், கீழஆம்பூர், ஆழ்வார்குறிச்சி, காக்கநல்லூர், பிரம்மதேசம், வாகைகுளம், மன்னார்கோவில், அடைச்சாணி, ரங்கசமுத்திரம், இடைகால் உள்ளிட்ட ஊராட்சிகளுக்கு உள்பட்ட 50-க்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு குடிநீர் விநியோகிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. கருணை ஆற்றின் கடைசிப் பகுதியான பிரம்மதேசம், மன்னார்கோவில், வாகைகுளம் ஊராட்சிப் பகுதிகளில் கடும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது.

தென்மேற்குப் பருவமழை பெய்தால்தான் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களின் குடிநீர், பாசனத் தேவையை பூர்த்தி செய்ய முடியும். இன்னும் ஓரிரு நாளில் பருவமழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தினமலர்

3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் மின்சார உற்பத்தி: ஆண்டுதோறும் ரூ.72.8 கோடி வருவாய்

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நவீன மயமாக்கும் திட்டம் துவக் கப்பட்டு, 48 மெகா வாட் மின் உற்பத்தி செய்ய பணிகள் துவங்கியது.விழுப்புரம் மாவட்டத் தில் உள்ள மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 285.85 கோடி மதிப்பில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து நவீனமயமாக்கும் திட்டப் பணிகளை முதல்வர் கருணாநிதி வீடியோ கான்பரன்சிங் மூலம் துவக்கி வைத்தார்.

இத்திட்டம் துவக்கப் பட்டுள்ள மூங்கில்துறைப் பட்டு (கள்ளக்குறிச்சி 1 ) சர்க்கரை ஆலை கடந்த 1967ல் உருவாகியது. தினசரி 2500 டன் கரும்பு அரவை செய்யப்படுகிறது. இதற்காக 18 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு பயிரிடப்பட்டு அரவைக்கு கொண்டு வரப்படுகிறது. 80 கோடி ரூபாயில் புதிய திட்டம் துவங்கி 15 மெகா வாட் அளவில் இணை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படுகிறது.ஆலையின் உபயோகத்திற்கு போக 10 மெகாவாட் மின் வாரியத்திற்கு வழங்கப்படும். இதனால் 22.5 கோடி ரூபாய் ஆண்டு வருமானம் வருவதோடு, 7 கோடி யூனிட் மின்சாரம் பொது விநியோகத்திற்கு அளிக்கப்படும்.திட்டம் துவங்கியுள்ள கச்சிராயப்பாளையம் (கள்ளக்குறிச்சி 2) கூட்டுறவு சர்க்கரை ஆலை கடந்த 97ம் ஆண்டு துவக்கப்பட்டது. 2500 டன் அரவை திறனில் செயல்படும் இந்த ஆலை அரவைக்காக 18 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு பயிரிடப்படுகிறது. 80 கோடி ரூபாயில் துவங்கும் இந்த திட்டம் மூலம் 15 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்படும். ஆலையின் உபயோகத்திற்குப் போக 10 மெகா வாட் மின் வாரியத்திற்கு வழங்கப்படும்.

பெரியசெவலையில் உள்ள செங்கல்ராயன் கூட் டுறவு ஆலை கடந்த 1980ம் ஆண்டு துவக்கப்பட்டு தினசரி 3000 மெட்ரிக் டன் அரவை திறனோடு இயங்கி வருகிறது. 22 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு பயிரிடப்படுகிறது. இங்கு 125 கோடி ரூபாய் மதிப்பில் துவங்கும் இந்த திட்டத்தில் 18 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்படும். ஆலையின் உபயோகம் போக 12 மெகா வாட் மின் வாரியத்திற்கு வழங் கப்படும். இதன் மூலம் ஆண்டிற்கு 27.8 கோடி ரூபாய் வருமானம் கிடைக் கும். ஆண் டிற்கு 8.9 கோடி யூனிட் மின்சாரம் பொதுவிநியோகத்திற்கு கிடைக் கும்.இந்த மூன்று சர்க்கரை ஆலைகளிலும் 285 கோடி ரூபாயில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அடுத்தாண்டு செப்டம்பரில் பணிகள் முடிக்கப்படும். இதன் மூலம் 72.8

கோடி ரூபாய் லாபம் பெறவும், ஒவ்வொரு ஆலையிலும் 100 பேருக்கு கூடுதலாக வேலை வாய்ப்பு வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.கரும்பு சர்க்கரை மட்டுமே உற்பத்தி செய்து வந்த நிலையில் ஆலைகளை லாபகரமாக இயக்க கரும்பு சக்கையிலிருந்து இணை மின் நிலையங்கள் அமைத்து மின்சாரம் தயாரிக்கவும், கரும்பு கசடிலிருந்து எத்தனால் உற்பத்தி செய்யும் வடிப்பாலைகள் அமைத்து நிதிநிலையை மேம்படுத்தப்படுகிறது.தேய்மானம் அடைந்த இயந்திரங்களை மாற்றி நீராவி மற்றும் மின் தேவையை குறைத்துக் கொண்டு கூடுதல் மின் உற் பத்தியை வெளியே கொடுத்திடும் பயனுள்ள வகையில் இத்திட்டத்தை செயல்படுத்திட ஆலை நிர்வாகத்தினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

**ஆடி பட்டத்திற்கு விதைகள் இருப்பு வைக்க கோரிக்கை**

சிறுபாக்கம்: மங்களூர் ஒன்றிய விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் ஒன்றிய வளாகத்தில் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார். தோட் டக்கலை உதவி இயக்குனர் முருகன், வேளாண் பொறியியல் துறை பொறியாளர் வீரசுப்பிரமணியம் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர் டென்சிங் வரவேற்றார்.கூட்டத்தில் மங்களூர் ஒன்றிய கரும்பு விவசாயிகளுக்கு இறையூர் அம்பிகா மற்றும் சித்தூர் ஆரூரான் சர்க்கரை ஆலைகளிலிருந்து நேரடியாக உரங்கள் வழங்குவதை மாற்றி, சிறுபாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்க வேண்டும். ரசாயன உரங்களை போதிய அளவிற்கு இருப்பு வைக்க வேண்டும். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முழு மானிய விலையில் பி.வி.சி., பைப்புகள், வேளாண் கருவிகள் வழங்க வேண்டும். ஆடிப்பட்டத்திற்கு தேவையான 20:20:0 தேவையான விதைகள் இருப்பு வைக்க வேண்டும் என விவசாயிகள் பேசினர்.கூட்டத்தில் கால்நடை உதவி மருத்துவ அலுவலர் சுப்ரமணியன், வேளாண்மை விற்பனைக்குழு சிவக்குமார், விவசாயிகள் மணிகண்டன், இளங்கோவன்

**பால் விற்பனை நிலையம் திறப்பு விழா பெரம்பலூரில் எம்.எல்.ஏ., பங்கேற்பு**

பெரம்பலூர்: பெரம்பலூரில் நேற்று புதிதாக தொடங்கப்பட்டுள்ள பால் விற்பனை நிலையத்தை பெரம்பலூர் எம்.எல்.ஏ., ராஜ்குமார் திறந்து வைத்தார். பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியான வடக்குமாதவி சாலை யில் உள்ள உழவர் சந்தையில் ஆவின் நிறுவனம் சார்பில் பால் விற்பனை துவங்க வேண்டும் என பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இதைத்தொடர்ந்து உழவர் சந்தையில் பால் விற்பனை நிலையம் அமைக்கப் பட்டு இதன் திறப்பு விழா நடந்தது. விழாவுக்கு பெரம்பலூர் நகராட்சி தலைவர் ராஜா தலைமை வகித்தார். நான்காவது வார்டு கவுன்சிலர் முகமதுபாரூக், பெரம்பலூர் உழவர் சந்தையின் நிர்வாக அலுவலர் (பொறுப்பு) முருகையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் பெரம்பலூர் எம்.எல்.ஏ.,

ராஜ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பால் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து, முதல் விற்பனையை தொடங்கி வைத்து பேசினார்.

விழாவில், அரசு வக்கீல் ராஜேந்திரன், தி.மு.க., பொதுக்குழு உறுப்பினர் துரைராஜ், அண்ணாதுரை உட்பட பலர் பங்கேற்றனர். உழவர் சந்தை பொறுப்பாளர் அனந்தராமன் நன்றி கூறினார்.

**ஃப்ளம்ஸ் பழம் வரத்து குறைவால் விலை உயர்வு**

சேலம்: சேலத்திற்கு குறைந்த அளவிலே ஊட்டி ஃப்ளம்ஸ் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளதால், அவற்றின் விலையில் கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. வெயிலின் தாக்கத்தை தொடர்ந்து சேலத்தில் பழைய பஸ் ஸ்டாண்ட், கடை வீதி, அஸ்தம்பட்டி, நான்கு ரோடு, ஐந்து ரோடு, ஜங்ஷன் உட்பட நகரின் முக்கிய வீதிகளில் ஊட்டி ஃப்ளம்ஸ் பழங்களின் விற்பனை சூடுபிடிக்கத் துவங்கியுள்ளது. சேலத்திற்கு ஊட்டியில் இருந்து ஃப்ளம்ஸ் பழங்கள் ஏப்ரல் முதல் வாரத்திலேயே விற்பனைக்கு வந்து விடும். இந்த ஆண்டு இப்பழங்கள் தற்போது தான் விற்பனைக்கு வந்துள்ளன. சேலத்தில் தற்போது மாம்பழ சீஸன் உச்சக்கட்டத்தில் இருப்பதால், இப்பழங்களை கொள்முதல் செய்ய வியாபாரிகள் தயக்கம் காட்டி வந்தனர். தற்போது சேலத்தில் அக்னி நட்சத்திரம் முடிவடைந்த நிலையிலும் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. அதனால், வியாபாரிகள் ஊட்டியில் இருந்து குறைந்த அளவில் ஐந்து டன் ஃப்ளம்ஸ் பழங்களை மட்டும் சேலத்திற்கு விற்பனைக்கு கொண்டு வந்துள்ளனர்.

சேலத்திற்கு வந்துள்ள இப்பழங்களை தரம் வாரியாக பிரித்து சில்லறை வியாபாரிகள் தற்போது நகரின் முக்கிய வீதிகளில் தள்ளுவண்டிகள் மூலம் விற்பனை செய்து வருகின்றனர். தாகத்தை தணித்து உடலின் சூட்டை தணிக்கும் இப்பழங்கள் விற்பனை சூடுபிடித்துள்ளதால் விலையில் கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கிலோ 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட சிறிய ரக ப்ளம்ஸ் பழங்கள் தற்போது 60 ரூபாய்க்கும், நடுத்தர ரகம் 75 ரூபாய்க்கும், பெரிய ரகம் 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.இது குறித்து கடை வீதியை சேர்ந்த வியாபாரி முருகன் கூறியதாவது: சேலத்தில் தற்போது மாம்பழ சீஸன் உச்சக் கட்டத்தில் உள்ளதால், பெரிய வியாபாரிகள் ஊட்டியில் இருந்து ஃப்ளம்ஸ் பழங்களை விற்பனைக்கு வரவழைக்க தயக்கம் காட்டுகின்றனர். குறைந்த அளவில் பழங்கள் மட்டும் விற்பனைக்கு வருவதால் இவற்றின் விலை உயர்ந்துள்ளது. இன்னும் சில தினங்களில் அதிக அளவு பழங்கள் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கிறோம். அப்போது விலை குறைய வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**சத்தியில் கார்பைட் மாம்பழம் கண்டுகொள்ளாத அதிகாரிகள்**

சத்தியமங்லம்: சத்தியமங்கலம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் அதிகமாக விற்பனையாகும் மாம்பழத்தை கார்பைட் கல் வைத்து பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுகிறது. இதை தடுக்க சுகாதாரத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். சத்தியமங்கலம் பகுதியில் தற்போது மாம்பழ சீஸன் தொடங்கியுள்ளதால், பல்வேறு பகுதியில் விளையும் மாங்காய்களை வியாபாரிகள் மொத்தமாக வாங்கி வருகின்றனர். டன் கணக்கில் மாங்காய்களை வாங்கும் வியாபாரிகள் குடோன்களில் வைத்து பழுக்க வைக்கின்றனர். இந்த முறையை சில ஆண்டுகளாக இப்பகுதி வியாபாரிகள் கையாள்கின்றனர்.காய்களாக கொள்முதல் செய்யப்படும் மாங்காய்களை கார்பைட் கல்களை கொண்டு பழுக்க வைக்கின்றனர். இந்த பழங்களை சாப்பிடுவதால் குறிப்பாக குழந்தைகளுக்கு வயிற்றுபோக்கு மற்றும் சூட்டு கொப்பளங்கள் ஏற்படுகிறது. மேலும் வயிற்றுவலி மற்றும் வாந்தியும் ஏற்படுகிறது.பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் மாம்பழங்களை அழிக்க, நகராட்சி சுகாதார அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

### பெருந்துறை சங்கத்தில் 24 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை விற்பனை

பெருந்துறை: பெருந்துறை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 24 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை தேங்காய் விற்பனை நடந்தது. பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு நேற்று 70ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. முதல் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோவுக்கு 34.15 ரூபாய் முதல் 34.60 வரையும், இரண்டாம் தரம் 28.05 ரூபாய் முதல் 33.25 வரையும் ஏலம் போனது. மொத்தம் 24 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை செய்யப்பட்டது. பெருந்துறை வாரச்சந்தைக்கு 40ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. முதல் தரம் தேங்காய் ஒன்று ரூ. 4.50 முதல் ரூ. 5 வரையும், இரண்டாம் தரம் தேங்காய் 4 ரூபாய் முதல் 4.50 வரையும், மூன்றாம் தரம் தேங்காய் மூன்று ரூபாய் முதல் 3.50 வரையும் ஏலம் போனது.

### மைலம்பாடியில் ரூ.75 லட்சத்துக்கு எள் ஏலம்

அந்தியூர்: மைலம்பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 75 லட்சம் ரூபாய்க்கு எள் ஏலம் நடந்தது. மைலம்பாடி ஒழுங்குமுறை விறபனைக்கூடத்தில் சனிக்கிழமை தோறும் எள் ஏலம் நடக்கிறது. கடந்த 5ம் தேதி நடந்த ஏலத்துக்கு ஈரோடு, நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் 1,900 மூட்டை எள் விற்பனைக்காக கொண்டு வந்தனர். கடந்த வாரத்தை விட 700 மூட்டை கூடுதல். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் நடராஜன் முன்னிலையில் ஏலம் நடந்தது.வெள்ளை ரகம் எள் குண்டாலுக்கு அதிகபட்ச விலையாக 5,505 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 4,789 ரூபாய்க்கும், சிவப்பு ரகம் எள்

குவிண்டாலுக்கு அதிகபட்ச விலையாக 4,229 ரூபாய்க்கும், குறைந்த பட்ச விலையாக 3,429 ரூபாய்க்கும் விலை போனது. கடந்த வாரத்தை 100 ரூபாய் கூடுதல். மொத்தம் 75 லட்சம் ரூபாய்க்கு எள் விற்பனை செய்யப்பட்டது. ஈரோடு, தர்மபுரி, விருதுநகர் மற்றும் கர்நாடகா மாநிலம் ராமாபுரம் ஆகிய இடங்களில் இருந்து நூற்றுக்கணக்கான வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு எள் வாங்கிச்சென்றனர்.

**ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் ரூ. 51 லட்சத்துக்கு எள் ஏலம்**

சிவகிரி: சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 51 லட்சம் ரூபாய்க்கு எள் ஏலம் நடந்தது. சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வெள்ளி தோறும் எள் ஏல விற்பனை நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் மொத்தம் 1,661 எள் மூட்டை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இதில் வெள்ளை ரக எள் கிலோ ஒன்றுக்கு குறைந்த பட்சமாக 46 ரூபாய்க்கும், அதிகபட்சமாக 60 ரூபாய்க்கும் விற்பனையானது. சிகப்பு ரக எள் கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்சமாக 33 ரூபாய்க்கும், அதிகபட்சமாக 45 ரூபாய்க்கும் விற்பனையானது. கருப்பு ரக எள் குறைந்தபட்சமாக கிலோ ஒன்றுக்கு 34 ரூபாய்க்கும், அதிகபட்சமாக 44 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. மொத்தம் 50 லட்சத்து 76 ஆயிரத்து 675 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. பெருந்துறை, காங்கேயம், குளித்தலை, முத்தூர் மற்றும் பல பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் எள்ளை வாங்கிச் சென்றனர். சிவகிரி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் எள்ளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். இத்தகவலை ஒழுங்குமுறை விற்பனைகூட மேற்பார்வையாளர் முனுசாமி தெரிவித்தார்.

**வெல்லம் ஏற்றுமதி அதிகரிப்பால் ரூ.1 விலை உயர்வு வெளி மாநிலங்களுக்கு 30 லோடு பயணம்**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்கு வெல்லம் அனுப்புவது அதிகரித்ததால் வெல்லம் கிலோவுக்கு ஒரு ரூபாய் அதிகரித்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் முள்ளாம்பரப்பு, அம்மாபேட்டை, வடபழனி, பிழிக்கல்பாளையம் ஆகிய இடங்களில் வெல்லமும், கோபி, கவுந்தபாடி, அலங்கியம், பவானி ஆகிய இடங்களில் நாட்டு சர்க்கரையும் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் நாட்டு சர்க்கரை, வெல்லம் ஆகியவை கவுந்தப்பாடி, சித்தோடு ஆகிய இரு வெல்ல மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.கரும்பு அறுவடை சீஸன் முடிந்ததால் வெல்லம் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், சித்தோடு, கவுந்தப்பாடி வெல்ல மார்க்கெட்டுக்கு வெல்லம் வரத்து குறைந்துள்ளது. வெளி மாநிலங்களுக்கு வெல்லம் அனுப்புவது அதிகரித்துள்ளது. வெல்லம் தேவை அதிகரிப்பு காரணமாக நாட்டு சர்க்கரை, அச்சு வெல்லம், உருண்டை வெல்லம் மூன்றும் சென்ற வாரத்தை விட நடப்பு வாரம் கிலோவுக்கு ஒரு ரூபாய் விலை அதிகரித்துள்ளது. சென்ற வாரம் 1,250 முதல்

1,500 ரூபாய்க்கு விற்கப்பட்ட 60 கிலோ நாட்டு சர்க்கரை 1,300 முதல் 1,550 ரூபாய், 680 முதல் 880 ரூபாய் வரை விற்கப்பட்ட 30 கிலோ உருண்டை வெல்லம் 800 முதல் 900 ரூபாய், 720 ரூபாய் முதல் 900 ரூபாய் வரை விற்கப்பட்ட 30 கிலோ அச்சு வெல்லம் 850 முதல் 970 ரூபாயாக உயர்ந்துள்ளது.

வெல்லம் விலை உயர்ந்துள்ளதால் வெல்லம் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வெல்லம் வியாபாரிகள் கூறியதாவது: நடப்பாண்டு ஜனவரி மாதத்தில் நாட்டு சர்க்கரை மற்றும் வெல்லம் தேவை அதிகரிப்பு காரணமாக விற்பனை நன்றாக இருந்தது. ஃபிப்ரவரி மாதத்தில் நாட்டு சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றின் உற்பத்தி அதிகரிக்க துவங்கியது. பொதுவாகவே ஜனவரி, ஃபிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் வெல்லம் சீஸன் என்பதால் வெல்லம் விலை வீழ்ச்சியடைந்தது. அத்துடன் வட மாநில வியாபாரிகள் வரத்து குறைந்ததால், 200 ரூபாய் வரை விலை சரிவு ஏற்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் திடீரென பெய்த மழை காரணமாக வெல்லம் உற்பத்தி சிறிது பாதிக்கப்பட்டது. தற்போது மார்க்கெட்டுக்கு வெல்லம் வரத்து குறைந்துள்ளது. அதே வேளை, வடமாநில வியாபாரிகள் மீண்டும் வரத் துவங்கி உள்ளதால் விற்பனை சூடுபிடிக்க துவங்கி உள்ளது. வடமாநிலங்களுக்கு தினசரி 20 முதல் 30 லோடு வரை செல்கிறது. விலையும் கிலோவுக்கு ஒரு ரூபாய் வரை உயர்ந்துள்ளது.ஈரோடு மாவட்டத்தில் கரும்பு அறுவடை சீஸன் முடிந்து விட்டது. தாராபுரம் பகுதியில் ஒரு சில இடங்களில் மட்டுமே கரும்பு அறுவடை நடக்கிறது. வெல்ல உற்பத்தியாளர்கள் இப்பகுதியில் இருந்து கரும்பு அறுவடை செய்து குறைந்தளவே வெல்லம் தயாரிக்கின்றனர். சித்தோடு, கவுந்தப்பாடி வெல்லம் மார்க்கெட்டுக்கு சில நாட்களாக வெல்லம் வரத்து குறைந்து விட்டது. புது கரும்பு வரத்து இன்னும் ஒரு மாதத்தில் வரத்தாகும் என்பதால் வெல்லம் தயாரிப்பு அதிகரித்து விடும். இவ்வாறு அவர் கூறினார்.

**75% கடன் செலுத்தி 25% நிவாரணம் விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு**

தஞ்சாவூர்: "வங்கிகள் மூலம் விவசாய கடன் பெற்ற விவசாயிகள் 75 சதவீத பங்கினை வரும் ஜூன் 30ம் தேதிக்குள் கட்டி 25 சதவீத அரசு நிவாரணத்தையும், புதிய கடனையும் பெறலாம்' என தஞ்சை கலெக்டர் சண்முகம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து கலெக்டர் வெளியிட்ட அறிக்கை: வங்கிகள் மூலம் விவசாய கடன் பெற்ற விவசாயிகளுக்கான மத்திய அரசின் விவசாயக்கடன் தள்ளுபடி, கடன் நிவாரணத் திட்டத்தின் படி பெரிய விவசாயிகள் தவணை தவறிய நிலுவைத் தெ ாகையில் 25 சதவீதம் நிவாரண ம் போக மீதம் உள்ள 75 சதவீத ம் பங்கினை கட்டிய பிறகே அ ரசு நிவாரணத்தொகை அவர்கள் கணக்கில் வரவு வைக்கப்படும். பெரிய விவசாயிகள் தங்கள் 75 சதவீத பங்கினை மொத்தமாகவோ அல்லது மூன்று தவணைகளிலோ செலுத்தலாம். கடைசி

மற்றும் மூன்றாவது தவணை 2009ம் ஆண்டு டிச., 31ம் தேதிக்குள் செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது கடனை திருப்பிச் செலுத்துவதற்கான காலக்கெடு மத்திய அரசால் வரும் ஜூன் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதனால் தகுதி உள்ள விவசாயிகள் தங்களின் 75 சதவீத பங்கினை ஜூன் 30ம் தேதிக்குள் செலுத்தினால் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் நிவாரணத்தொகை வரவு வைக்கப்படும். விவசாயிகள் ஜூன் 30ம் தேதிக்குள் இறுதித் தவணைத் தொகையைக் கட்டத்தவறினால் தங்களின் கடன் நிவாரண சலுகையை இழக்க நேரிடும்.

கடன் தொகை தவணை கடந்த கடனாக கருதப்பட்டு முழுக்கடன் தொகையை வட்டியுடன் சேர்த்து திருப்பி செலுத்த வேண்டிய நிலை வரும். தகுதி உள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி அரசு வழங்கும் 25 சதவீத கடன் நிவாரணத்்ø¾õகயை பெற வேண்டும். இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் வட்டி சலுகையையும் பெற்று பயனடைய வேண்டும். இவ்வாறு ஜூன் 30க்குள் தவணை தவறிய கடனை திருப்பு செலுத்தும் விவசாயிகள் புதிய விவசாயக் கடன் பெற தகுதி உடையவர்களாகிறார்கள். இவ்வாறு கலெக்டர் சண்முகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**துவரை செயல் விளக்க திடல் அமைக்க மானியம்**

ராசிபுரம்: "துவரையை தனிப்பயிராக சாகுபடி செய்ய செயல்விளக்க திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு 5,000 ரூபாய் மானியம் வழங்கப்படும்' என, ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:ராசிபுரம் வட்டாரத்தில் இதுவரை மானாவாரி நிலங்களில் நிலக்கடலையில் ஊடுபயிராக "துவரை' பயிரிடப்பட்டது. துவரை உற்பத்தியை அதிகரிக்க வேளாண் துறை திட்டமிட்டுள்ளது. அதன்படி துவரையை தனிப்பயிராக சாகுபடி செய்ய செயல் விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது. 120 நாட்களில் அறுவடைக்கு தயாராகும் ஐசிபிஎல் 85063 என்ற புதிய ரக துவரை செயல் விளக்க திடலுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

தற்போது பரவலாக பெய்துள்ள மழையை பயன்படுத்தி விவசாயிகள் துவரையை பயிரிடலாம்.விவசாயிகள் துவரை செயல் விளக்க திடல் அமைக்க தேவையான இடுபொருள்கள் மானிய விலையில் அரசு வழங்குகிறது. துவரையை தனிப்பயிராக சாகுபடி செய்ய செயல்விளக்க திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு 5,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். இந்த வாய்ப்பை ராசிபுரம் வட்டார விவசாயிகள் பயன்படுத்தி துவரையை பயிரிட்டு பயன்பெறலாம். இது குறித்த விபரங்களுக்கு ராசிபுரம் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகள் உழைப்பில் "மண்' : சூறாவளியால் 15 ஆயிரம் வாழை நாசம்**

அன்னூர் : அன்னூரில் இரண்டாவது நாளாக வீசிய சூறாவளியில் 15 ஆயிரம் வாழைகள் முறிந்து விழுந்து நாசமாயின.

அன்னூர் வட்டாரத்தில் ஆயிரம் ஏக்கரில் நேந்திரன் மற்றும் கதளி ரக வாழை பயிரிடப்பட்டுள்ளது. கடந்த 4ம் தேதி வீசிய சூறாவளியில் அன்னூரின் மேற்கு பகுதியான குப்பேபாளையம், செங்காளிபாளையத்தில் 25 ஆயிரம் வாழைமரங்கள் முறிந்து விழுந்தன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு அன்னூர் நகர் மற்றும் வடக்கு பகுதியில் கன மழை பெய்தது. மழையுடன் சூறாவளியும் வீசியது. காற்று சுழன்று அடித்ததில் அன்னூர் ஓதிமலைரோடு, சத்தி ரோடு, செல்லனூர், அல்லிகுளம், மூக்கனூர், வடக்கலூர் ஆகிய இடங்களில் பயிரிடப்பட்டிருந்த 15 ஆயிரம் வாழை மரங்கள் முறிந்து விழுந்தன.

இன்னும் இரண்டு மாதத்தில் வெட்டி விற்கும் நிலையில் இருந்த வாழைத்தார்கள் காற்றால் மண்ணில் சாய்ந்தன. "விழுந்த வாழைத்தார்களில் காய்கள் மிகவும் பிஞ்சாக உள்ளதால் விற்பனை செய்ய முடியாது. பல மாதங்கள் கஷ்டப்பட்டு, வங்கி கடன் பெற்று பயிரிட்டு இருந்தோம்.

காற்றால் வாழைமரம் முறிந்து விழுந்ததால் பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது' என, விவசாயிகள் தெரிவித்தனர்.பாதிக்கப்பட்ட வாழைத்தோட்டங்களை பேரூராட்சி தலைவர் வசந்தாமணி, துணைத்தலைவர் விஜயகுமார் பார்வையிட்டனர். கிராம நிர்வாக அலுவலரிடம் விவசாயிகள் சேதம் குறித்து தெரிவித்தனர். "வாழைக்கு குறைந்த தொகையில் இன்சூரன்ஸ் செய்யும் திட்டத்தை அரசு அமல்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**குவாதிமாலாவில் சூறாவளி பாதிப்பு ஏலக்காய் விலை உயரும் வாய்ப்பு**

கம்பம்: மத்திய அமெரிக்க நாடான குவாதிமாலாவில் சமீபத்தில் வீசிய பலத்த சூறாவளியால், அங்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இந்தியாவில் விளையும் ஏலக்காய்க்கு விலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

குவாதிமாலா நாட்டில் மானாவாரி பயிராக ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இதனால் பராமரிப்பு செலவு மிகவும் குறைவு. ஆனால் இந்தியாவில் கேரளா போன்ற மாநிலங்களில் நடக்கும் ஏலக்காய் சாகுபடியில் மருந்து அடித்தல், உரம் வைத்தல், தண்ணீர் அடித்தல், கவாத்து எடுத்தல், களையெடுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எந்தவித செலவும் செய்யாமல் ஏலக்காய் கிடைப்பதால், குவாதிமாலா நாட்டு ஏலக்காய் மிகவும் குறைவான விலைக்கு விற்கப்படுகிறது. இதனால் இந்திய ஏலக்காய்க்கு சர்வதேச மார்க்கெட்டில் விலை

கிடைக்கவில்லை. இந்நிலையில் குவாதிமாலா நாட்டில் வீசிய சூறாவளி மற்றும் புயல் மழை காரணமாக, ஏலச்செடிகள் முற்றிலும் அழிந்து போனது. இதனால் சர்வதேச மார்க்கெட்டில் இந்திய ஏலக்காய்க்கு விலை கிடைத்துள்ளது. எனவே இந்திய ஏலக்காய்க்கு தற்போது கிலோ 1500 ரூபாய் விலை கிடைக்கிறது.

இப்போதே ஏற்றுமதிக்கான ஆர்டர்களும் வரத்துவங்கியுள்ளன. எனவே இந்திய ஏலக்காய் விலை அதிகரிக்கும் என்று வர்த்தகர்கள், விவசாயிகள் மற்றும் ஆக்ஷன் கம்பெனிகள் மதிப்பீடு செய்துள்ளன. நல்ல விலை கிடைக்கும் என்ற நிலை உள்ளதால், ஏலக்காய் விவசாயிகள் தோட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்தி, உற்பத்தியை பெருக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். கே.சி.பி.எம்.சி. ஏலக்காய் ஆக்ஷன் கம்பெனியின் இணை நிர்வாக இயக்குநர் ஜியாவுதீன் அகமது கூறுகையில் "2 ஆண்டுகளாக அமெரிக்காவில் எழுந்த பொருளாதார நெருக்கடியால், குவாதிமாலா நாட்டில் உள்ள ஏலக்காய் ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்பட்டனர். எனவே இந்திய ஏலக்காய்க்கு விலை கிடைத்தது. தற்போது அங்கு இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டுள்ளது. காபி மற்றும் ஏலப்பயிர்கள் சேதமடைந்துள்ளன. எனவே இந்திய ஏலக்காய் விலை நன்றாக இருக்கும். வளைகுடா நாடுகளில் இந்திய ஏலக்காய்க்கு நல்ல கிராக்கி உள்ளது' என்றார்.

**விவசாயிகளுக்கான தேசிய தோட்டக்கலை இயக்க சுற்றுலா**

செக்கானூரணி: திருமங்கலம் வட்டார தோட்டக்கலைத்துறை சார்பில், "தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்' கீழ், விவசாயிகளுக்கான 7நாள் பயிற்சி சுற்றுலா நடைபெற்றது. அதில் செக்கானூரணி, மைட்டான்பட்டி, நாகையாபுரம் உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். துவக்க விழாவிற்கு திருமங்கலம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ஜவஹரிபாய் தலைமை வகித்தார். ஊராட்சி ஒன்றிய தலைவர் கொடிசந்திரசேகரன் கொடியசைத்து துவக்கி வைத்தார். தோட்டக்கலை அலுவலர் மணிவேலு, உதவி அலுவலர்கள் அழகர்சாமி, சிவராஜ், பாஸ்கரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மேலூர் பகுதியில் 500 ஏக்கர் வாழை சேதம் : விவசாயிகள் சோகம்**

மேலூர்: மேலூர் பகுதியில் வீசிய சூறைக்காற்றால் லட்சக்கணக்கான வாழை மரங்கள் சாய்ந்து விவசாயிகளுக்கு சேதத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் வாழை விவசாயிகள் பெரும் சோகத்தில் மூழ்கி உள்ளனர். நேற்று முன்தினம் மேலூர் பகுதியில் பலத்த சூறைக் காற்றுடன் ஐஸ் கட்டி மழை பெய்தது.

குறிப்பாக ஆட்டுக்குளம், கணபதிபுரம், வண்ணாம்பாறைப்பட்டி, சாத்தமங்கலம், தனியாமங்கலம், வெள்ளலூர், உறங்கான்பட்டி, குறிச்சிப் பட்டி கிராமங்களில் உள்ள மொத்த வாழையும் சேதம் அடைந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் 50 முதல் 100 ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டிருந்தது. ஏக்கருக்கு ஆயிரம் வாழை மரங்கள் நடவு செய்யப்படும். இந்த வகையில் 500 ஏக்கரில் லட்சக்கணக் கான வாழை மரங்கள் சேதமடைந்து உள்ளது. குறிப்பாக ஆட்டுக்குளத்தை சேர்ந்த விவசாயிகள் திலகர், துரைப் பாண்டி, பாக்கியம், தெய்வேந்திரன், சோணை உட்பட 15 பேரின் 40 ஏக்கர் வாழை முற்றிலும் சேதம் அடைந்தது. ஏக்கருக்கு பல ஆயிரம் ரூபாய் செலவு செய்த விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

அரசு தங்களுக்கு ஏதாவது நிவாரணம் தர வேண்டும் என இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலூர் பிரபு கூறும்போது, ""சராசரியாக வரும் வாழைத் தார்களை விட தற்போது நான்கு மடங்கு அதிகம் வரத்து உள்ளது. காற்றில் ஒடிந்து விழுந்த வாழை தார்களை வாங்க வியாபாரிகள் தயாரில்லை. ஏற்கனவே விற்பனையான விலையில் பாதியளவு கூட தற்போது வாழை தார்களின் விலை இல்லை. பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதால், இன்னும் சில நாட்களில் வாழைப் பழங்களின் விலை உயர வாய்ப்புள்ளது என்றார்.

**வறட்சியால் வாடும் பயிர்கள்**

உசிலம்பட்டி: உசிலம்பட்டி பகுதியில் போதுமான மழை இல்லாத காரணத்தினால் வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயிர்களும் கருகுகின்றனஉசிலம்பட்டி பகுதியில் இந்த ஆண்டு போதுமான மழை இல்லை.

இறவை பருவத்தில் கிடைக்கும் மழையின் மூலம் பயிரிட்டுள்ள விவசாயிகள் தொடர் மழை கிடைக்காவிட்டால் கிணற்று பாசனம் செய்யலாம் என்ற நம்பிக்கையில் வறட்சியை தாங்கக் கூடிய பயிர்களை பயிரிடுவர். இந்த ஆண்டு செம்பட்டி, கட்டத்தேவன்பட்டி, சிந்துபட்டி, கள்ளபட்டி உள்ளிட்ட பகுதிகளில் வறட்சியை தாங்கக் கூடிய பயறு வகைகள், சோளம், எள் போன்ற பயிர்களை சாகுபடி செய்திருந்தனர். மழையும் தொடர்ச்சியாக கிடைக்காமல், அதிகமான வெயிலால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து போனது. கட்டத்தேவன் பட்டியைச் சேர்ந்த விவசாயி நடுப் பாண்டி கூறும் போது, ""வெங்காயம், தரை புடலை, சுரைக்காய், என எனது நிலத்தில் பிரித்து பிரித்து பயிர் செய்திருந்தேன். மீன் வளர்க்கவும் முன்னேற்பாடுகள் செய்து வைத்துள்ளேன். போர் வெல்லில் இருக்கும் தண்ணீரை பாய்ச்ச போதுமான மின்சாரம் கிடைக்கவில்லை. அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் எந்த பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுவது, எந்த பயிரை காப்பாற்றுவது என தெரியாமல் திண்டாடி வருகிறோம்," என்றார்.செம்பட்டி காசிமாயன் கூறும் போது, ""இறவை பருவத்தில் கிடைத்த மழையை கொண்டு சோளம், எள் போன்ற

பயிர்களை பயிரிட்டேன். மழை இல்லாததால் கிணற்றிலும் தண்ணீர் வற்றியது. இரண்டு பயிர்களும் கருகி இந்த முறை பலன் கிடைக்காமல் போய் விட்டது," என்றார்.செம்பட்டி ஊராட்சித் தலைவர் செல்லப்பாண்டி கூறும்போது,
""இரண்டு ஏக்கரில் பாசிப்பயறும், வெண்டைக்காயும் பயிரிட்டு உள்ளேன். அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் வெண்டை பயிரை மட்டும் கிடைக்கும் குறைந்த மின்சாரம், தண்ணீர் கொண்டு காப்பாற்றி வருகிறோம். ஆனால் பாசிபயறு முற்றிலும் கருகிப்போனது," என்றார்.

**செயற்கையாக கனிய வைக்கப்பட்ட மாம்பழம் விற்றால் நடவடிக்கை : மாநகராட்சி கமிஷனர் எச்சரிக்கை**

மதுரை: ""செயற்கையாக பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங் களை விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும்"" என மாநகராட்சி கமிஷனர் செபாஸ்டின் எச்சரித்தார். மதுரையில் சில வியாபாரிகள், கார்பைட் கற்களை வைத்து மாம்பழங்களை பழுக்க வைக்கின்றனர். இதுபற்றி ஏராளமான புகார்கள் வந்ததையடுத்து, சிம்மக்கல், யானைக்கல், வடக்கு மாசி வீதி, வடக்கு வெளி வீதிகளில் உள்ள கமிஷன் மண்டிகளில் , நகர்நல அலுவலர் சுப்பிரமணியன் தலைமையில், அதிகாரிகள் சோதனை செய்தனர். கற்களை வைத்து பழுக்க வைக்கப் பட்ட இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஏழு டன் மாம்பழங்களை பறிமுதல் செய்தனர்.இவற்றை கமிஷனர் செபாஸ்டின் ஆய்வு செய்து, வெள்ளக்கல்லுக்கு கொண்டு சென்று மாம்பழங்களை அழிக்க உத்தரவிட்டார். தொடர்ந்து அவர் கூறுகையில், ""செயற்கையாக பழுக்க வைக்கப்பட்ட பழங்களால், உடல்நலம் பாதிக்கப்படும்.

இயற்கையாக பழுக்க வைக்கப் பட்ட பழங்களையே விற்க வேண்டும். இதை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்"' என்றார்.தலைமை பொறியாளர் சக்திவேல், மக்கள் தொடர்பு அலுவலர் ஆர்.பாஸ்கரன், உணவு ஆய்வாளர்கள் முரளீதரன், தங்கப்பாண்டி, வெங்கடசாமி, ரத்தினகுமார், முத்துச்சாமி ஆகியோர் சோதனையில் ஈடுபட்டனர்.

**பேய்க்குளம் அருகே சூறாவளி காற்று : 10 ஆயிரம் வாழைகள் சேதம்**

பேய்க்குளம் : பேய்குளம் அருகே ஏற்பட்ட சூறாவளி மழையினால் 10 ஆயிரம் வாழைகள் மற்றும் வீடுகள் சேதமடைந்தன.
பேய்க்குளம் மற்றும் சாத்தான்குளம் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் திடீரென மழை மற்றும் சூறாவளி காற்று வீசியது. இதனால் கோமானேரி பஞ்.,குட்பட்ட கோமானேரி கூவைகிணறு, கலுங்குவிளை மற்றும் கருங்கடல் பஞ்.,குட்பட்ட கருங்கடல், இளமால்குளம்,

புளியங்குளம் பகுதியில் சுமார் 10 ஆயிரம் வாழைகள் சூறாவளிகாற்றில் சாய்ந்து சேதமடைந்தது. மேலும் ஆஸ்பெடாஸ், ஓட்டுவீடுகள் பலத்த காற்றினால் தூக்கி வீசப்பட்டன. இப்பகுதிகளில் ஆலமரங்கள், வேம்பு உட்பட பல மரங்கள் மற்றும் உயர் அழுத்த மின்கம்பங்கள் சரிந்து விழந்தன.

கருங்கடல் பகுதியில் வீடுகள் பல சேதமடைந்தன. அதிர்ஷ்டவசமாக உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை, கோமானேரி பகுதியில் மின்கம்பங்கள் சரிந்து விழுந்ததால் மின்தடை ஏற்பட்டது. நேற்று இதனை சரிசெய்யும் பணியில் மின்வாரிய அதிகாரிகள், ஊழியர்கள் ஈடுபட்டனர். கூவைகிணறு பகுதியில் ஒரு வீட்டின் மீது மின்கம்பம் சரிந்து விழுந்தது. மேலும் கோயில் கம்பவுண்டு சுவர் மீது மரம் விழுந்ததால் சேதமடைந்தது. ரோட்டில் விழுந்த மரங்கள் மற்றும் மின்கம்பங்களை பொதுமக்கள் அப்புறபடுத்தி போக்குவரத்தை சரிசெய்தனர். இப்பகுதியில் திடீரென வீசிய சூறாவளிகாற்று மழையால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து தமிழக அரசு உடனடி கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நிலத்தடி நீரில் உப்புத்தன்மை அதிகரிப்பால் விவசாயிகள் அதிர்ச்சி!**

உடுமலை : "கார, அமில மற்றும் உப்புதன்மை ஆண்டுதோறும் அதிகரித்து வரும் குடிமங்கலம் பகுதி நிலத்தடி நீர் விவசாயத்திற்கு லாயக்கற்றது' என்ற பொதுப்பணித்துறை ஆய்வறிக்கையால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

குடிமங்கலம் பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. பல கிராமங்களில் நிலத்தடி நீர் கார, அமிலம் மற்றும் உப்பு தன்மை மிகுந்ததாக உள்ளது. ஆண்டு தோறும் நிலத்தடி நீரின் தன்மையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு விவசாய பயிர்களுக்கு கிணறு மற்றும் போர்வெல் தண்ணீரை பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாய சாகுபடி பரப்பு ஆண்டுதோறும் பல மடங்கு குறைந்து வருகிறது. தக்காளி, கத்தரி உட்பட காய்கறி பயிர்கள், மக்காச்சோளம், கரும்பு, பருத்தி போன்ற பணப்பயிர்கள் சாகுபடி நிலத்தடி நீரின் மாற்றத்தால் காணாமல் போய் வருகிறது.

வல்லக்குண்டாபுரம், விருகல்பட்டி, வீதம்பட்டி, லிங்கமநாயக்கன்புதூர், புதுப்பாளையம், அடிவள்ளி, பண்ணைக்கிணறு, தொட்டம்பட்டி, கோழிக்குட்டை, பொட்டையம்பாளையம் உட்பட 25 க்கும் அதிகமான கிராமங்களில் நிலத்தடி நீரில் உப்புத்தன்மை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடல் தண்ணீரை போல உப்பு தன்மை மிகுந்ததாகவும், இதர வேதித்தன்மைகள் மிகுந்தும் காணப்படுவதால் விளைநிலங்களில் நேரடியாக தண்ணீரை விவசாயிகள் பாய்ச்ச முடிவதில்லை.

நேரடியாக தண்ணீரை பாய்ச்சும் போது நிலங்களில் உப்பு படிமங்கள் படிந்து மண்ணின் மேல்தோற்றம் வெள்ளை நிறத்தில் மாறுகிறது. இந்த நிலங்களில் மானாவாரி பயிர்களான கொண்டைக்கடலை, சோளம், தட்டை, உளுந்து உட்பட தானியப்பயிர்கள் முளைப்பதில்லை. கிணற்றுப்பாசனத்திற்கு இப்பகுதியில் தென்னை மட்டுமே பயிரிட முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. உப்பு தண்ணீரால் தென்னையிலும் இலைக்கருகல் உட்பட பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டு வருகிறது. மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச பயன்படுத்தப்படும் சொட்டு நீர் குழாய்கள் குறுகிய காலத்தில் அமில மற்றும் கார தன்மையால் அரிக்கப்பட்டு வீணாகிறது.

நிலத்தடி நீரை மேம்படுத்தி குடிமங்கலம் பகுதியில் விவசாயத்தை அழியாமல் தடுக்க வேண்டும் என பல ஆண்டுகளாக விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், அரசு சார்பில் எந்த நடவடிக்கையும் இல்லை. கடந்த சில மாதங்களுக்கு முன்பு பொதுப்பணித்துறை சார்பில் நிலநீர் பிரிவு சார்பில் பெதப்பம்பட்டியில் விவசாய கருத்தரங்கு நடந்தது. இதில், விவசாயிகள் தங்கள் கிணறு மற்றும் போர்வெல் நீரை பரிசோதனைக்காக எடுத்து வர அறிவுறுத்தப்பட்டிருந்தது.

பரிசோதனை முடிவில், இக்கிராமங்களின் நிலத்தடி நீரில் கார, அமில மற்றும் உப்புத்தன்மை மிகுந்த காணப்பட்டதுடன் விவசாய மற்றும் இதர பணிகளுக்கு பயன்படுத்த லாயக்கற்றது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர். பிரச்னைக்கு தீர்வு ஏற்படுத்த வேண்டும் என அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். பல மாதங்களாகியும் எந்த துறை அதிகாரிகளும் இப்பிரச்னை குறித்து கண்டுகொள்ளவில்லை.

இது குறித்து பாசன சங்க நிர்வாகிகள் மற்றும் விவசாயிகள் அரசுக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு: குடிமங்கலம் பகுதியில் நிலத்தடி நீர் பிரச்னையால் பல கிராமங்களில் விவசாயம் காணாமல் போய் வருகிறது. பருத்தி சாகுபடி அதிகளவு மேற் கொள்ளப்பட்ட இந்த கிராமங்கள் தற்போது நிலத்தடி நீரில் உவர்ப்பு தன்மை பிரச்னையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிக்கு அரசு சிறப்பு திட்டங்களில் நிதி ஒதுக் கீடு செய்து பல ஆயிரம் ஏக்கர் நிலங்களை பாதுகாக்க வேண்டும். விஞ்ஞானிகள் குழு ஆய்வு நடத்தி அதன் அடிப்படையில் நிலத்தடி நீரை மேம்படுத்த பரிந்துரைகள் வழங்க வேண் டும். இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வெங்காய ஏற்றுமதிக்கு அனுமதி : உ.உ.க., தலைவர் வலியுறுத்தல்**

தாராபுரம் : ""வெங்காயத்துக்கு கட்டுப்படியான விலை கிடைக்காததால், நிரந்தர ஏற்றுமதிக்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண் டும்," என, உழவர் உழைப் பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து கூறினார்.

அவர் நிருபர்களிடம் கூறியதாவது: இடுபொருள் விலையேற்றத்தாலும், ஆள் பற்றாக்குறையாலும் விவசாயிகள் மிகுந்த சிரமப்படுகின்றனர். வெட்டுக்கூலி, வண்டி வாடகை அதிகரித்து வருவதால், ஆலை நிர்வாகமே வெட்டுக்கூலி, லாரி வாடகையை உயர்த்தித்தர வேண்டும். பனை, தென்னை விவசாயிகள் மரம் ஏறும் தொழிலாளர்களின் நலன் கருதி, தமிழகத்தில் கள் இறக்கி விற்பனை செய்யஅனுமதிக்க வேண்டும்.

தாராபுரம் வட்டார பகுதியில் கோழிப்பண் ணைகளுக்கு இலவச மின் சார இணைப்பு பெற்ற மின் மோட்டார் மூலமாக கிணறுகளில் தண்ணீர் எடுத்து பயன்படுத்துவது தவறு என மின்வாரியம் அபராதம் விதிக்கிறது. கோழிப்பண்ணை, ஆடு, மாடு, குடிநீருக்கும் பயன்படுத்துவதை தடை செய்யக் கூடாதென தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம்.

தாராபுரம் பகுதியில் 35க்கும் மேற்பட்ட தனியார் விதை நெல் உற்பத்தி மையங்கள் உள்ளன. இந்தியாவின் விதை நெல் தேவையில் 40 சதவீதம் இங்கிருந்து தான் மற்ற பகுதிகளுக்கு அனுப்பப் படுகிறது. விவசாயிகளிடம் இருந்து அரிசி ஆலைக்காரர்கள் வாங்கும் நெல்லை, விதை பண்ணையாளர்கள் வாங்கி, சுத்தம் செய்து விதை ஆய்வு அதிகாரிகளால் முளைப்பு திறனை மட்டுமே ஆய்வு செய்து விவசாயிகளுக்கு விதை நெல்லாக விற்பனை செய்கின்றனர். விதை நெல்லின் விளையும் திறனை ஆய்வு செய்து, அரசே நேரடியாக விதை நெல் வழங்க வேண்டும்.

உப்பாறு அணைக்கு பல ஆண்டுகளாக தண்ணீர் வரத்தில்லை. உப்பாறு வலசு, இடது குரை வாய்க் கால் பாசன பகுதியான 10 ஆயிரத்துக்குமேற்பட்ட ஏக்கர் விவசாய விளை நிலங்கள் காய்ந்து வறண்டு காணப்படுகின்றன. உப் பாறு பாசன பகுதி விவசாயிகளின் நலன் கருதி உப் பாறு அணைக்கு தமிழக அரசு தண்ணீர் கொண்டு வர வேண்டும். வெங்காயத்துக்கு நிரந்தரமான விலை கிடைப்பதில்லை. விவசாயிகளின் நலன் கருதி சின்ன வெங்காயத்தை நிரந் தரமாக ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும். இவ்வாறு, செல்லமுத்து கூறினார்.

---

***கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உழவர் தினவிழா அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தொடங்கி வைக்கிறார்***

*கோவை, ஜூன்.7–*
*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் வருகிற 9 மற்றும் 10–ந் தேதிகளில் மாநிலம்*

*தழுவிய உழவர் தினவிழா நடக்கிறது. விழாவை வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தொடங்கிவைக்கிறார்.*

*புதிய பயிர் ரகங்கள்*

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில், ஆராய்ச்சியாளர்கள் மூலம் உருவாக்கப்பட்ட புதிய பயிர் ரகங்கள், தோட்டக்கலை பயிர் ரகங்கள், வேளாண் பண்ணை கருவிகள் மற்றும் இதர தொழில்நுட்பங்கள் வெளியிடப்பட உள்ளன. மாநிலத்தில் பயிர் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்களை மேற்கொண்டு அதிக அளவில் உற்பத்தி செய்து சாதனை படைத்த விவசாயிகளுக்கு வேளாண் செம்மல் விருது வழங்கப்பட உள்ளது.*

*இதே போல் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் இதர சார்பு துறைகளின் நவீன தொழில்நுட்பம், புதிய பயிர் ரகங்கள், கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பம் அடங்கிய வேளாண் கருத்து காட்சியும் நடக்கிறது.*

*கருத்தரங்கு–செயல்விளக்க நிகழ்ச்சி*

*விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக நவீன தொழில்நுட்பம் குறித்த கருத்தரங்கு நடக்கிறது. இதில் செம்மை நெல் சாகுபடி, துவரையில் நாற்று மூலம் நடவு, மரபணு மாற்றுப் பயிர்கள், பழ மரங்கள் சாகுபடியில் அடர்நடவு முறை மற்றும் மேலாண்மை, துல்லிய பண்ணை விவசாயம், மானாவாரி வேளாண் தொழில் நுட்பம், பயறுவகை மற்றும் எண்ணெய் வித்துகள் உள்பட பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்கு நடக்கிறது. மேலும் நவீன தொழில்நுட்பங்களான பண்ணை எந்திர கருவிகளை உபயோகிக்கும் முறை, மரபு சாரா எரிசக்தி, இணையதள வேளாண் விரிவாக்கம், உயிர் எரிசக்தியின் பயன்பாடு, காளான் வளர்ப்பு மற்றும் உணவு பொருட்களின் மதிப்பு கூட்டுதலும் அறுவடைக்கு பின்செய் நேர்த்தி உள்பட பல்வேறு தலைப்புகளில் செயல்விளக்க நிகழ்ச்சியும் நடக்கிறது.*

*தொடக்க விழா*

*இதன் தொடக்க விழா வருகிற 9–ந் தேதி நடக்கிறது. வேளாண்மை துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வேளாண் கருத்து காட்சியை தொடங்கி வைத்து புதிய பயிர் ரகம் மற்றும் பண்ணை கருவிகளை வெளியிட்டு பேசுகிறார்.*

*விழாவில் ஊரக தொழில் மற்றும் கால்நடை துறை அமைச்சர் பொங்கலூர்.நா.பழனிசாமி, மாநகர மேயர் வெங்கடாசலம், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள், விவசாய பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்துகொள்கின்றனர்.*

*இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலர் ரவிக்குமார் தியோடர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.*

## நடப்பு நிதி ஆண்டில் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 12% உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு நிதி ஆண்டில், பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்கள் மற்றும் பழங்கள் ஏற்றுமதி 12 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிங்கப்பூரில் மாம்பழ கண்காட்சி ஒன்றை தொடங்கி வைத்தபோது, இந்திய வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் பொது மேலாளர் பிரவின் குப்தா இந்த தகவலை வெளியிட்டார்.
சென்ற நிதி ஆண்டில், பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்கள் ஏற்றுமதி 5 சதவீதம் அதிகரித்து ரூ.40,000 கோடியாக உயர்ந்துள்ளது.
வெளிநாடுகளில், பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்கள் விற்பனையை அதிகரிக்கும் வகையில் கடந்த 2007–ஆம் ஆண்டில் அமெரிக்காவிலும், 2008–ஆம் ஆண்டு மற்றும் 2009–ஆம் ஆண்டுகளில் முறையே ஜப்பான் மற்றும் சீனாவிலும் ஒருங்கிணைக்கப்பட்ட சிறப்பு அங்காடிகள் தொடங்கப் பட்டுள்ளன. இதர நாடுகளிலும் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருன்றன. இதனால், உணவு பொருள்கள் ஏற்றுமதி ஆண்டுதோறும் 12 சதவீதம் அதிகரிக்கும் என குப்தா மேலும் தெரிவித்தார்.
இந்திய மாம்பழங்களை வெளிநாட்டினர் மிகவும் விரும்புகின்றனர். சென்ற ஆண்டில் 1.50 கோடி டன்னாக இருந்த மாம்பழங்கள் உற்பத்தி, இவ்வாண்டில் 1.90 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.

---

## குன்னூர் ஏல மையத்தில் 30 சதவீத தேயிலை தூள் தேக்கம் விவசாயிகள் கவலை

குன்னூர், ஜூன்.7–
குன்னூர் ஏல மையத்தில் சுமார் 30 சதவீத தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தது.
தேயிலை ஏலம்
வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்கள் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு வர்த்தகர்களும், வெளி நாட்டு வர்த்தகர்களும் கலந்து கொள் கிறார்கள்.
விற்பனை 22–க்கான ஏலம் கடந்த 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 13 லட்சத்து 9 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வந்தது. இதில் 8 லட்சத்து 67 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 48 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.
வெளி நாட்டு வர்த்தகர்கள்
தேயிலை ஏலத்தில் ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய வெளி நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்தனர். உள்நாட்டு வர்த்தகர்களும் ஏலத்தில் ஆர்வம் காட்டவில்லை.
இதன் காரணமாக அனைத்து ரக தேயிலை தூளுக்கும் 2 ரூபாய் வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டது. தேயிலை தூளுக்கு கிராக்கி இல்லாததால் 30 சதவீத தேயிலை தூள் தேயிலை ஏல மையத்தில் தேக்கம் அடைந் தது.

இலை ரகம்

ஏலத்தில் சி.டிசி. தேயிலை யின் உயர்ந்த பட்ச விலையாக 152 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலை 166 ரூபாயாக இருந்தது.

இலை ரகத்தின் சாதாரண வகை 43 ரூபாயில் இருந்து 46 ரூபாய் வரையிலும், உயர்விலை தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 188 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 40 ரூபாயில் இருந்து 44 ரூபாய் வரையிலும், உயர் விலை தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 130 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 23–க்கான ஏலம் வருகிற 10, 11 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. ஏலத்திற்கு மொத்ம் 15 லட்சத்து 92 அயிரம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வருகிறது.

குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விற்பனை ஆகாமல் தேங்கி வருவதால், பச்சை தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் நீலகிரி தேயிலை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.